கோயம்புத்தூர், அரசு மகளிர் கல்வியியல் கல்லூரி முதல்வரின் செயல்முறைகள்

முன்னிலை: முனைவர். சு. கீதா, எம்.எஸ்ஸி.,எம்.எட்.,பிஎச்.டி.,பிஜிடிபிஐ

ந.க.எண். 1076/அ/2023 நாள்.04.01.2024

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – கோயம்புத்தூர், அரசு மகளிர் கல்வியியல் கல்லூரி,– கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட திருமதி. மா. மகேஸ்வரி என்பாருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை: 1.அரசாணை நிலை எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (Q1) துறை, நாள். 08.03.2023.
2.சென்னை -15, கல்லூரி கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 1058/பி1/2023, நாள். 06.12.2023

******

ஆணை:

பார்வை 2-இல் காணும் கல்லூரி கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்களது பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக, பார்வை 1-ல் காணும் அரசாணையின் படி வெளியிடப்பட்ட தமிழ்நாடு குடிமைப்பணிகள் (கருணை அடிப்படையில் பணிநியமனம் - விதிகள் 2023-ன் விதி-16-ல் ஒவ்வொரு நியமன அதிகாரியும் இந்த விதிகளின் கீழ் நியமிக்கப்பட்ட நபரின் தகுதி பொருட்டு பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் அவரது பணிகளை முறைப்படுத்த வேண்டும் எனவும், மேற்காண் விதியின் அடிப்படையில் கருணை அடிப்படையில் நியமனம் பெற்ற பணியாளர்களது பணியினை வரன்முறை செய்வதற்கு விதித்தளர்வு ஏதும் தேவைப்படாத நிலையில் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி-10-ன் படி இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பதவிக்கு நியமன அலுவலர் சார்ந்த கல்லூரி முதல்வரே என்பதால் முதல்வரே பணிவரன்முறை செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி. மா. மகேஸ்வரி என்பவர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என்பதாலும், தனியர் பணியில் சேரும்பொழுது அளித்த கல்வி சான்றுகள் மெய்தன்மைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்பதால் அன்னார் பணியில் சேர்ந்த நாளான 31.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாகிறது.

4.1.2024.

முதல்வர்
அரசு மகளிர் கல்வியியல் கல்லூரி
கோவை - 641 001.

4/1/2024

பெறுநர்.
திருமதி. மா. மகேஸ்வரி, இளநிலை உதவியாளர்,
அரசு மகளிர் கல்வியியல் கல்லூரி, கோயம்புத்தூர்

நகல்:

1. கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ.), கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை -15 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
2. கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், கல்லூரிக் கல்வி இணை இயக்ககம், கோயமுத்தூர் மண்டலம், கோயமுத்தூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
3. உ பரி.